# நபிகளாரின் திருப்பெயரால்...

***உருது மூலம்:*** **அல்லாமா முப்தி அஹ்மத்யார்கான் நயீமி ரஹிமஹுல்லாஹ்**

***தமிழில்:*** **மௌலானா மௌலவி முஹம்மது ஷரீப் ஸூபி காதிரி**

நபிகளாரின் திருப்பெயர் பாங்கில்...(அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்) கூறப்படும்போது பெருவிரலையோ அல்லது கலிமா விரலையோ முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொள்வது முஸ்தஹப்பாகும்.

நபிகளாரின் திருப்பெயரை சங்கை செய்வதால் ஈருலக பயனுண்டு.

இதுபற்றி பல்வேறு ஹதீதுகள் உள்ளன. சஹாபாக்கள் இதை அமல் செய்து வந்துள்ளனர். பொதுவாக முஸ்லிம்கள் அதனை (முஸ்தஹப்பாக) விரும்பத்தகுந்த நற்செயலாக அமல்செய்து வருகின்றனர்.

சலாத் மஸ் ஊதீ என்னும் நூலில், இரண்டாம் பாகத்தில், தொழுகை பற்றிய பாடப்பிரிவில் வருகிறது:

"எவர் பாங்கில் (அதானில்) என் பெயரைக் கேட்டு தன் இரு பெருவிரலை தன் இரு கண்களில் வைத்து (ஒற்றி)க் கொண்டாரோ அவரை நான் கியாம நாளில் மக்களின் அணிவகுப்பில் தேடிப்பிடித்து என்னுடன் சுவனத்திற்கு அழைத்துச் செல்வேன்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

உலகெங்கிலும் இஸ்லாமிய சட்டமேதைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹனஃபி சட்டநூல் ஷாமீயில் (முதல் பாகம், அதான்(பாங்கு) பற்றிய பாடப்பிரிவில்) வருகிறது... பாங்கில் முதல் ஷஹாதத்தில் (அதாவது அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என முதல் முறை கூறும்போது) ஸல்லல்லாஹு அலைக யாரசூலல்லாஹ்! (யாரசூலல்லாஹ்! தங்களின் மீது சலவாத் உண்டாகட்டும்) என்று கூறுவதும் பின் இரண்டாவது ஷஹாதத்தில் "குர்ரத் ஐனீ பிக யாரசூலல்லாஹ்! "(யாரசூலல்லாஹ்! தங்களால் என் கண் (குளிர்ந்தது) என்று கூறுவதும் பின்பு தனது பெருவிரல் நகக் கண்களை தன் கண்களில் வைத்து "அல்லாஹும்ம மத்திஃனீ பிஸ்ஸம்இ வல் பசரி" (யாஅல்லாஹ் எனக்கு நான் கேட்பதையும், காண்பதையும் மகிழ்வாக்கித் தந்தருள்வாயாக!) எனக் கூறுவதும் முஸ்தஹப்பாகும். ஏனெனில் இவ்வாறு கூறுபவர்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தம்முடனே சுவனபதி அழைத்துச் செல்வார்கள்.

கஹ்ஸ்தானீ, கன்ஜுல் இபாத் போன்ற கிரந்தங்களில் இவ்வாறே வருகிறது. இதுபோலவே ஃபதாவா சூஃபியாவிலும் வருகிறது. மேலும் கிதாபுல் ஃபிர்தவ்ஸில் வருகிறது... எவர் பாங்கில்(அதானில்) அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்பதைக் கேட்டு தன் பெருவிரலை முத்தமிட்டு (கண்களில் ஒற்றிக் கொள்வாரோ நான் அவரை என்னுடனே அழைத்துச் சென்று சுவனபதியில் சேர்த்து வைப்பேன்(என்ற ஹதீஸ் ரிவாயத்



www.sufimanzil.org

செய்யப்பட்டுள்ளது). இதுபற்றிய இன்னும் தெளிவான விளக்கம் பஹ்ருர் ராயிக் நூலின் விரிவுரை ரமலீயில் இடம்பெறுகிறது.

இந்த வாசகத்திலேயே அங்கீகரிக்கப்பட்ட ஆறு நூல்கள் ஆதாரமாக அமைந்துள்ளதைப் பார்ப்போம். 1. ஷாமீ. 2. கன்ஜுல் இபாத். 3. ஃபதாவா சூஃபிய்யா 4. கிதாபுல் ஃபிர்தவ்ஸ் 5. கஹ்ஸ்தானீ. 6. பஹ்ருர்ராயிக் விரிவுரை ரமலீ.

இந்த அனைத்துக் கிரந்தங்களும் அதனை முஸ்தஹப் என்று தீர்ப்புச் செய்துள்ளன. மகாஸிதுல் ஹஸனா ஃபில் அஹாதீஸித் தாயிரதி அலஸ்ஸனதி எனும் நூலில் இமாம் சகாவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். தைலமீ ஃபிர்தவ்ஸ் கிரந்தத்தில் பதிவு செய்கிறார்கள். அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முஅத்தின் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று கூறும்போது அவ்வாறே கூறி தமது கலிமா விரலின் உட்பகுதியை முத்தமிட்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். அப்போது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னவர்கள் கூறினார்கள்... என் நேசர் (அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் செய்ததைப் போல எவர் செய்கிறாரோ அவருக்கு என் ஷஃபாஅத்து(பரிந்துரை) உறுதியாகிவிட்டது.

அதே மகாஸிதுல் ஹஸனாவில் ஆசிரியர் அபுல் அப்பாஸ் அஹ்மத்... அவர்கள், அபூபக்கர் ரத்தாரிடமிருந்து நகல் செய்கின்றனர்... ஹழ்ரத் கிள்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்: முஅத்தின் "அஷ்ஹதுஅன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று கூறும்போது "மர்ஹபம் பிஹபீபீ வ குர்ரத ஐனீ முஹம்மதிப்னி அப்தில்லாஹ்" (என் பிரியமான அண்ணலே, முஹம்மத் பின் அப்துல்லாஹ் எனும் என் கண் (உள்ளக்) குளிர்ச்சியே... நல்வரவாகுக) என்று கூறி தன் இரு பெருவிரல்களையும் முத்தமிட்டு தன் இரு கண்களில் ஒற்றிக் கொண்டால் அவருக்கு எப்போதும் கண்வலியே ஏற்படாது.

சட்டமேதை முஹம்மத் பின் பாபா தன் அனுபவத்தைக் கூறுகிறார்கள்... ஒருமுறை கடுமையான சூறைக்காற்று வீசியபோது அவர்களின் கண்ணில் கற்துகள் நுழைந்து, வெளிவராது துன்புறுத்திக் கொண்டிருந்தது. கடும்வேதனை அப்போது பாங்கு சொல்லப்பட முஅத்தின் "அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்" என்றபோது அவர்கள் அவ்வாறு (வழமை போலக்) கூறியதும் உடனே அத்துகற்கள் வெளியாகிவிட்டது.

இதே மகாஸித் ஹஸனாவில் ஷம்ஸ் முஹம்மத் பின் சாலிஹ் மதனீயின் ரிவாயத் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்னார் இமாம் அம்ஜத் அவர்கள் கூற தாம் கேட்டதாகக் கூறுகிறார்கள். இமாம் அம்ஜத் மிஸ்ரில் முன்னோர்களான முதகத்திமீன்களில் ஒரு முக்கிய அறிஞர். அன்னார் கூறினார்கள்: எவர் பாங்கில் பெருமானாரின் புனிதப் பெயரைக் கேட்டுஇ தன் கலிமா விரலையும், பெருவிரலையும் சேர்த்து அவ்விரண்டையும் முத்தமிட்டு அதனை தன் இரு கண்களிலும் தடவிக் கொண்டால் அவருக்கு எப்போதுமே கண்வலி ஏற்படாது.

பிறகு கூறுகிறார்கள்:ஈராக்கைச் சேர்ந்த ஷைகுமார்களில் ஒருவர் கூறியுள்ளார்: இவ்வாறு செய்து வருபவருக்கு கண்வலியே ஏற்படாது. நான் இதைக் கடைப்பிடித்து வந்தது முதல் எனக்கு கண் வலியே ஏற்படவில்லை.

அதே மகாஸித் ஹஸனாவில் இன்னும் கொஞ்சம் மேலே போய்... குறிப்பிடுகிறார்கள்... இப்னு சாலிஹ் கூறுகிறார்கள்: நான் அதை அறிந்ததிலிருந்து அமல் செய்து வருகிறேன். என் கண்ணில் வலி ஏற்படவே இல்லை. மேலும் இன்ஷாஅல்லாஹ் இது நீடிக்கும் என்றும், மேலும் நான் பார்வையிழந்து விட மாட்டேன் என்றும் எனக்கு நம்பிக்கையுள்ளது.

பிறகு கூறுகிறார்கள்: இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிய ஹதீது ரிவாயத் செய்யப்பட்டுள்ளது. எவர் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்பதைக் கேட்டு மர்ஹபம் பிஹபீபீ வ குர்ரது ஐனீ முஹம்மதிப்னி அப்தில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று கூறி தம் பெருவிரலை முத்தமிட்டு தன் கண்களில் ஒற்றிக் கொண்டால் அவர் பார்வையற்றுப் போய்விட மாட்டார். அவர் கண்களில் வலியோ வேதனையோ உண்டாகாது.

மகாஸித் ஹஸனாவில் இதுபோன்ற பல ரிவாயத்களில் பல சஹாபாக்கள், இமாம்கள், ஷைகுமார்கள் இதனை அமல் செய்து வந்ததாக வருகிறது.

ஷரஹ் நிகாயாவில் வருகிறது...

அறிவீர். பாங்கில் “அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்“ என முதல்முறை கூறும்போது, ஸல்லல்லாஹு அலைக யாரசூலுல்லாஹ் என்றும், இரண்டாம் முறை சொல்லப்படும்போது குர்ரத் ஐனீ பிக யாரசூலுல்லாஹ் என்றும் கூறி தன் பெருவிரல் நகக் கண்களை கண்களில் ஒற்றிக் கொண்டால்... பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அவரை சுவனபதி அழைத்துச் செல்வார்கள்.

கன்ஜுல் இபாதிலும் இவ்வாறு வருகிறது...

மவ்லானா ஜமால் பின் அப்துல்லாஹ் பின் உமர்மக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது ஃபத்வா மார்க்கத் தீர்ப்பில் குறிப்பிடுகிறார்கள்...

பாங்கில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் திருநாமம் கூறக்கேட்டு பெருவிரலை முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொள்வது ஜாயிஜ் (ஆகுமானது) மட்டுமல்ல. அது முஸ்தஹப் (விரும்பத்தக்கதும்) ஆகும். இவ்வாறே எங்களின் ஷைகுமார்கள் தெளிவுபடுத்தித் தந்துள்ளனர்.

ஹழ்ரத் சத்ருல் அஃலாபாழில், உஸ்தாத், மவ்லானா, சய்யித் முஹம்மத் நாஈமுத்தீன் சாஹிப் கிப்லா, முராதாபாதீ ரஹ்மதுல்லாஹி அலைஹி கூறுகிறார்கள்... இன்ஜீலின் பழைய பிரதி ஒன்று அதற்கு இன்ஜீல் பரன்பாஸ் எனப் பெயர். அதுபல மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. அதன் அநேக சட்டங்கள் ஷரீஅத்தே முஹம்மதியாவோடு பொருந்திப்

போகின்றன. அதில் எழுதப்பட்டுள்ளது... ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பரிசுத்த ரூஹின் ஜோதியை (பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் ரூஹின் ஒளியை) பார்க்க வேண்டுமென ஆசைப்பட்டார்கள். அப்போது அவ்வொளி நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பெருவிரல் நகக் கண்களில் பிரகாசிக்கும்படி செய்யப்பட்டது. அன்னார் பிரியப்பட்டு அதனை முத்தமிட்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

ஹனபி மத்ஹப் மட்டுமல்ல. மற்ற மத்ஹபுகளும் அச்செயல் முஸ்தஹப் எனத் தீர்ப்பு செய்துள்ளன. ஷாஃபி மத்ஹபின் பிரபலமான சட்டநூல் இஆனதுத் தாலிபீனில் வருகிறது... “தன் இரு பெருவிரல்களையும் முத்தமிட்டு அவற்றைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டால் எப்போதும் பார்வையிழப்போ, கண் வலியோ ஏற்படாது.“

மாலிக் மத்ஹபின் பிரபல சட்டநூல் கிஃபாயத்தாலிபில் இதனைப் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இதன் விரிவுரையில் அல்லாமா ஷைக் அலீ அஸ்ஸாஈதீ அதவீ கூறுகிறார்கள். ஷைக் அல்லாமா, முஃபஸ்ஸிர் நூருத்தீன் குராஸானீ அவர்களை ஒருவர் பாங்கு சொல்லப்படும் நேரத்தில் சந்தித்தபோது அன்னார் முஅத்தின் “அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்“ எனக் கூறும்போது தன் இருபெருவிரல்களையும் முத்தமிட்டு அதனை கண்களில் (சுர்மா இடும் பகுதியில்) ஒரு ஓரத்திலிருந்து மறு ஓரம் வரை தடவினார்கள். ஒவ்வொரு தடவையும் இவ்வாறே செய்தனர்.

அதனைப் பற்றி அவர்கள் அன்னாரிடம் கேட்டபோது அன்னார் கூறினர்.. நான் முன்பு இதனை வழமையாக செய்து வந்தேன். இடையில் விட்டுவிட்டேன். அப்போது எனக்கு கண்ணில் நோய் பட்டது. அச்சமயம் நான் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் கண்டேன். அவ்வேளை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்... ஏன் பாங்கில் என் பெயர் கூறப்படும் போது பெருவிரல்களை முத்தமிடுவதை நிறுத்தி விட்டீர்? எனக் கேட்டார்கள்.நீர் அதனைக் கடைப்பிடித்து வந்தால் உன் கண் நோய் நீங்கிவிடும். பிறகு நான் கண்விழித்து விட்டேன். அதன்பிறகு அவ்வாறு நான் செய்து வருகிறேன். அந்நோய் நீங்கியதோடு பிறகு எனக்கு கண்ணில் எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை.

ஆக மேற்கண்ட ஆதாரங்களின் அடிப்படையில் பாங்கில் “அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் எனும்போது பெருவிரல் அல்லது கலிமா விரலை அல்லது இரண்டையுமே முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொள்வது முஸ்தஹப் எனும் விரும்பத் தகுந்ததாகும்“ என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

இது ஹழரத் ஆதம்நபி அலைஹிஸ்ஸலாம், ஹழ்ரத் அபூபக்கர் மற்றும் ஹழ்ரத் இமாம் ஹஸன் பின் அலி ரலியல்லாஹு அன்ஹும் போன்றோர் கடைபிடித்து வந்த சுன்னத்தாகவும் இருக்கிறது.

இது முஸ்தஹப் என்பது குர்ஆன் விரிவுரையாளர்களான, ஹதீது கலைஅறிஞர்களான சங்கைமிகு இமாம் பெருமக்களின் ஏகோபித்த தீர்ப்பாகும். அத்தோடு இது எல்லாக் காலத்திலும் எல்லா நாட்டிலும் முஸ்லிம்களால் பேணுதலோடு, நாயகத்தின் மீதான சங்கையோடு கடைப்பிடிக்கப்பட்டு வரும் விஷயமாகும்.

மேலும் மேற்கண்ட ஹதீதுகள் -ரிவாயத்துகளின் அடிப்படையில் பார்க்கும்போது இதை கடைபிடிப்போருக்கு 1. கண்வலி ஏற்படுவதில்லை. 2. கண் நோயக்கு சிறந்த சிகிச்சை 3. பார்வை இழப்பு ஏற்படாது 4. நாளை மறுமைநாளில் ஷ்ஃபாஅத்துல் குப்ரா எனப்படும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் மாபெரும் பரிந்துரை உண்டு. 5. நாயகம் கண்மணி முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களே தன் பெயருக்கு-தனக்கு-சங்கை செய்த அந்த மனிதரை கியாமநாளின் ஜனத்திரள்களுக்கிடையில் கண்டு, அவரை தன்னோடு மகத்தான அல்லாஹ்வின் அற்புத அருட்கொடையான சுவனபதி அழைத்துச் சென்றிடுவார்கள்.

இவ்வாறு தெளிவாக முஸ்தஹப் என்று அநேக ஆதாரங்களின் அடிப்படையில் இமாம் பெருமக்கள் தீர்ப்புச்செய்த பின்பும் இதனை ஒருவர் தவறு, கூடாது என்று சொல்வாரானால் நிச்சயமாக அவர் மார்க்கம் தெரியாத அறிவிலியாக இருக்க வேண்டும். அல்லது தெரிந்தும் மக்களை வழிகெடுக்கும் வஹ்ஹாபிக் கும்பலாக இருக்க வேண்டும்.

ஒரு ஷரீஅத் தடைசெய்யாத ஒரு நற்காரியத்தை முஸ்லிம்கள் நல்லதெனக் கருதினாலே அது முஸ்தஹப் எனும்போது பெருமானாரின் பிரியத்தால் அன்னாரின் பெயருக்கு மரியாதைசெய்து செய்யப்படும் இக்காரியம் கூடாது. பித்அத், மக்ரூஹ் என்பது எவ்விதத்திலும் சரியல்ல.

ஒரு விஷயத்தை ஆதாரமில்லாமல் தடை செய்யவோ, பித்அத் என்றிடவோ, மக்ரூஹ் என்று சொல்லவோ அனுமதி கிடையாது என்பதைப் புரிந்து கொள்வீர். அதுமட்டுமல்ல. பெருமானார் கண்மணி நாயகம் அஹ்மத் முர்தழா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் திருநாமத்தை எப்போதுமே சங்கை செய்து அன்னாரின் மீது மரியாதையோடு தான் சலவாத் கூற வேண்டும். எவ்வேளைகளிலும் சலவாத் கூறும்போது, எந்த நேரத்தில் பெருமானாரின் திருப்பெயர் சொல்லப்பட்டாலும் அவ்வாறு சங்கைசெய்யும் நல்ல நோக்கத்தில் பெருவிரலை முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாலும் தவறு கிடையாது. ஏனெனில் எப்போது பாங்கில்(அதானில்) நாயகத்தின் புனிதப் பெயர் கேட்டு அவ்வாறு சங்கை செய்வது முஸ்தஹப்பானதோ அதே அடிப்படையில் எப்போது பெருமானாரின் திருப்பெயர்கேட்டும் அவ்வாறு சங்கை செய்வது தவறாகாது. பெருமானாரை நேசிப்பதும், மதிப்பதும் ஈமானின் அடையாளங்களாகும்.

**இதுபற்றிய ஆட்சேபணைகளும் அதற்கான பதில்களும்**

**ஆட்சேபணை:** பாங்கில் பெருமானாரின் பெயர் கேட்டு பெருவிரலை (அல்லது கலிமா விரலை அல்லது இரண்டையும்) முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொள்வது பற்றி வந்திருக்கக்கூடிய

ஹதீது பலவீனமான ரிவாயத் என்பது தெரிந்த விசயம். அவ்வாறிருக்க அதை வைத்து எங்ஙனம் அமல் செய்வது கூடும்?

**பதில்:** பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறியதாக அறிவிக்கப்படாமல் ஒரு சஹாபி கூறியதோடு வரை மட்டும் வந்துள்ளது) என்பதை ஒப்புக் கொண்டுள்ள அல்லாமா முல்லா அலீ காரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்... அதற்குப்பின் எழுதுகிறார்கள்... நான் கூறுகிறேன் எப்போது இந்த ஹதீது (பெருமானார் வரை தொடர் நிறைவு செய்யப்படாவிட்டாலும்) ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு வரை வந்து விட்டதோ அதுவே அமல் செய்ய போதுமான ஆதாரமாகும். ஏனெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் நீங்கள் என் சுன்னத்(வழிமுறையையும்) மற்றும் சத்தியபாதை செல்லும் கலீஃபாக்களின் சுன்னத்தை(வழிமுறையையும்) பற்றிக் கொள்ளுங்கள் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

அவ்வாறே இங்கே எந்த இமாம்களும் இந்த ஹதீதே பலகீனமானது என்று கூறிவிடவில்லை. மாறாக அதன் தொடர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் வரை செல்லும் "மவ்கூஃப்" அல்ல. மாறாக சஹாபியோடு முடிந்துவிடும் மாஃபூஃ வகை என்றுதான் கூறியுள்ளார்கள். எனவே இந்த ஹதீது "சஹீஹ்" எனும் மிக்க உறுதிவாய்ந்த இடத்திற்கு வராவிட்டாலும் "ஹஸன்" எனும் வகையில் முஸ்தஹப்பான (ஃபர்ளு, வாஜிப், சுன்னத் முஅக்கதாவிற்கெல்லாம் அடுத்த அந்தஸ்திலுள்ள நன்மைக்குரிய, விடுவதால் தண்டனையோ, குற்றமோ ஏற்பட்டுவிடாத விரும்பத்தக்க) ஓர் அமலைச் செய்ய போதுமான ஆதாரமாகும்.

பொதுவாகவே பலகீனமானது என அறியப்படும் ஒரு ஹதீது பல சனதுகளில்(பல அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்பட்டு) வரும்போது (பலகீனமான நார்கள் ஒருங்கிணைந்து பலமான கயிறாவது போல) ஒன்றுக்கொன்று மற்ற சனதை உறுதி செய்து பலமடைகிறது. இதுபோன்ற ஹதீதுகள் குறைந்தபட்சம் "ஹஸன்" எனும் அந்தஸ்த்தைப் பெறுகின்றன.

ஒளுவில் ஓதப்படும் துஆக்கள் சம்பந்தமான பலகீனமான ஹதீதைப் பற்றி விளக்கும்போது, துர்ருல் முக்தார் முதல் பாகத்தில், ஒளுவின் முஸ்தஹப் எனும் பாடத்தில்... மேற்கண்டவாறு பல சனதுகளில் வருவதால் அது ஹஸன் எனும் அந்தஸ்த்தைப் பெறுகிறது. அதைக் கொண்டு முஸ்தஹப்பான அமல் செய்யலாம் என விளக்கப்பட்டுள்ளது.

இதை பலகீனமான ஹதீதுதான், என்னதான் பல சனதுகள் வந்தபோதும் அப்படித்தான் எனப் பிடிவாதம் பேசினாலும் அப்போதும் இதனைக் கொண்டு(முஸ்தஹப்பான) அமல் செய்ய இடமுண்டு.

அல்லாமா ஷாமீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ரத்துல் முக்தார் முதல் பாகத்தில் அதான் (பாங்கு) பற்றிய பாடப்பிரிவில் "முஸ்தஹப்பான அமல்களில் பலகீனமான ஹதீதைக் கொண்டு அமல் செய்யலாம்" என்று தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

அதாவது ஹலாலா? ஹராமா? கூடுமா? கூடாதா? என்பனவற்றில் தான் சஹீஹான ஹதீதைக் கொண்டு மட்டுமே ஷரீஅத் தீர்ப்புச் செய்ய முடியும். ஆனால் ஒரு விசயம் செய்வதால் நல்லதுதான். நன்மைதான் ஏற்படும். குற்றமோ, கூடாதெனும் தடையோ சொல்ல முடியாது என்று வரும் காரியங்களை – அமல்களை – நடைமுறைப்படுத்த பலகீனமான ஹதீது போதுமான ஆதாரமாகும்.

எனவே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களை நேசிப்பதும், சங்கை செய்வதும் கட்டாயமானது. ஈமான் என்னும் போது அச்சங்கையை வெளிப்படுத்துவது மிகச் சிறந்த அமல் நற்செயல் எனும் போது, அதனைக் குற்றம் சொல்லவோ, கூடாதென்று கூறவோ கிஞ்சிற்றும் இடமில்லை எனும்போது அதானில் (பாங்கில்) பெருமானாரின் புனிதப் பெயர் கேட்டு நேசத்தோடும், சங்கையோடும் செய்யப்படும் இச்செயலை முஸ்தஹப் என்று கூறுவதற்கு பலகீனமான ஹதீது போதுமென்பதே தெளிவான தீர்ப்பாகும்.

அதுமட்டுமல்ல. முஸ்லிம் மக்கள் ஒரு பலகீனமான ஹதீதைப் பின்பற்றி அமல் செய்து வந்தால் அந்த ஹதீதிற்கு பலம் கிடைத்து விடுகிறது. அதாவது அறிவிப்பாளர்களில் தொடரில் உள்ள குறைபாடு நீங்கி விடுகிறது.

இமாம் நவவீ ரஹிமஹுல்லாஹு அவர்கள் தமது கிதாபுல் அத்காரில் மய்யித்துக்கு தல்கீன் செய்வது பற்றிய ஹதீதைக் குறிப்பிடும்போது “மய்யித்துகக்கு தல்கீன் செய்வது பற்றிய ஹதீதின் சனதுகள் உறுதியானவை அல்லதான். ஆனாலும் இதை ஷாம் (சிரியா) போன்ற நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் அமல்படுத்தி வந்ததைக் கொண்டும், மேலும் சில சான்றுகளைக் கொண்டும் அது உறுதியான ஹதீதாகி விட்டது.

அவ்வாறு பாங்கில் விரல்களை முத்தமிட்டு கண்களில் ஒற்றிக்கொள்ளும் ஹதீதும் பெரும்பாலான தேச முஸ்லிம்களின் அமலில் உள்ளதென்பதால் அது வலுவாகிவிட்டது.

இதனைப் பற்றி மேலும் நூருல் அன்வார், தவ்ழீஹ் போன்ற “உசூலுல்ஃபிக்ஹ்“ சட்ட அடிப்படை நூல்களில் அறியலாம். நமக்கு இதுவே போதுமான விளக்கமாகும்.

மேலும் ஒருவேளை இதற்கு ஹதீது ஆதாரமே இல்லாமல் இருந்திருந்தாலும் கூட அப்போதும் இந்த விசயம் ஏற்புடையதாக ஆகும். ஏனெனில் நாயகம் கண்மணி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் பாக்கியம் பெற்ற தம் சமுதாயம் பற்றிக் கூறுகிறார்கள்... முஸ்லிம் மக்கள் எந்த ஒரு விசயத்தை நல்லதென (நற்காரியமெனக்) கருதுகிறார்களோ அவ்விசயம் அல்லாஹ்விடமும் நல்லதே(நற்காரியமே) ஆகும்.

அவ்விதத்தில் இப்புனிதச் செயலும் நல்லதே. நற்காரியமே.

அத்தோடு இது கண்ணியத்திற்குரிய சூஃபியாக்கள் எனப்படும் இறைநேசம் பெற்ற அல்லாஹ், ரசூலின் நேசத்தால் தம்மை முழுக்க, முழுக்க அல்லாஹ் ரசூலுக்கா ஆக்கிக் கொண்ட மகான்களால் நடைமுறைப்படுத்தி வந்த நற்செயலாகும்.

அல்லாமா ஷாஹ் வலியுல்லாஹ் முஹம்திஸ் தெஹ்லவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது ஹவாமிஆ நூலில் முன்னுரையில் குறிப்பிடுகிறார்கள்... (சமுதாயத்தில்) மக்களின் செயல்பாடுகள் ஆய்வின் வாசல்களைத் திறந்து விடுகின்றன. (நோயின் வெளிப்பாடுகள்) மருத்துவர் உலகில் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கும், ஆய்வுக்கும் வழிகோலுவது போல.

அல்லாமா ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹ்லவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் (இந்திய தப்லீக், தேவ்பந்தீய வஹ்ஹாபியக் காஃபிர்களால் கூட நிராகரிக்கப்பட முடியா மாமேதை) தமது அல்கவ்லுல் ஜமீல் போன்ற நூல்களில்... ஜின், ஷைத்தான், செய்வினை போன்றதை விட்டும் பாதுகாப்பிற்கான தஃவீதுகள், பெண்ணிற்கு கர்ப்பம் தரிப்பதற்கு, தரிபடுவதற்கு, சுகப்பிரசவத்திற்குரிய தஃவீதுகள் போன்ற எத்தனையோ பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கான பலதரப்பட்ட தஃவீதுகளை கூறியுள்ளார்கள். இன்ன துஆவை இன்ன, இன்னவிதம் எழுதிக் கட்ட வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதற்கெல்லாம் ஹதீதுகளின் ஆதாரங்களைக் கொண்டு வரவேண்டுமென்றால் ஏற்புடையதா?

அல்லாமா ஷாமீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சூன்யம், செய்வினையிலிருந்து பாதுகாப்புப் பெற, தொலைந்த பொருள் கிடைக்கப்பெற என பல பிரச்சினைகளுக்கு பல தீர்வுகளை எழுதியுள்ளார்கள். அதற்கெல்லாம் ஹதீது ஆதாரம் கேட்க முடியுமா?

அவ்வகையில் அவ்வாறு விரல்களை முத்தமிட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வது கண்நோய் நீங்கவும், கண்நோய் ஏற்படாதிருக்கவும் மருத்துவம் என்றால் அதனை நிராகரித்திட இயலுமா?

ஆக நாம் முன்பே குறிப்பிட்டதைப் போல “பெருமானார் கண்மணி நாயகம் முஹம்மது முஸ்தபா அஹ்மத் முஜ்தபா அண்ணலார் அவர்களின் அருட்திருப்பெயரை பாங்கில் கூறப்படும்போது பெருவிரலை (அல்லது கலிமா விரலை, அல்லது இரு விரல்களையும்) முத்தமிட்டு, கண்களில் ஒற்றிக் கொள்வது மார்க்கத்தில் முஸ்தஹப் எனும் விரும்பத்தக்க காரியமாகும்“ என்பது எல்லா இமாம்களின் ஏகோபித்த தீர்ப்பாகும்.

இங்கே விவாதிக்கப்படுவது அது முஸ்தஹப்பா? இல்லையா? என்பதல்ல. மாறாக அது சம்பந்தமாக வந்திருக்கக் கூடிய ஹதீதுகளின் நிலை என்ன என்பது பற்றிதான்.

இனி எங்களது கேள்வி என்னவென்றால், எங்களிடம் இது முஸ்தஹப் என்பதற்கு பலகீனமான ஹதீதும், இமாம்களின் தீர்ப்பும், முஸ்லிம்கள் கடைப்பிடித்து வருவதும், நல்லதெனக் கருதுவதும் மிகப்பெரிய முக்கியமான ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

ஆனால் அவ்வாறு விரல்களை முத்தமிடுவதும், கண்களில் ஒற்றிக் கொள்வதும் மக்ரூஹ் என்பதற்கோ அல்லது கூடாது என்பதற்கோ ஒரு ஆதாரத்தையாவது காட்ட முடியுமா? என்றால் முடியாது. ஆக எந்த ஒரு ஆதாரமமுமில்லாமல் ஒரு விஷயத்தை ஷரீஅத்தில்

மக்ரூஹ் (வெறுக்கத்தக்கது) என்றோ அல்லது கூடாது என்றோ கூறுவதற்கு யாருக்கும் அதிகாரமில்லை.

அதையும் அவ்வாறு பிதற்றுவதை ஷரீஅத் தீர்ப்பென்று ஏற்கவும் முடியாது. அத்தோடு அது அத்துமீறலும்கூட.

**ஆட்சேபணை:** நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம் பெருவிரல் நகக் கண்களில் நூரே முஹம்மதிய்யாவெனும் பெருமானாரின் பேரொளி கண்டு முத்தமிட்டனர். ஆனால் நீங்கள் அப்படி எதைக் கண்டு முத்தமிடுகிறீர்கள்? ஆக நீங்கள் முத்தமிடுவது வீண்தானே?

**பதில்:** ஹழ்ரத் ஹாஜரா அலைஹிஸ்ஸலாம் அன்று ஸஃபா, மர்வாவுக்கிடையில் ஏழுமுறை ஓடியது தன் குழந்தை ஹழ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தண்ணீர் தேடித்தானே. ஆனால் இன்று எதைத் தேடி ஹஜ் உம்ரா செய்வோர் ஓடுகின்றனர்?

அவ்வாறே அன்று நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை குர்பானி கொடுப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது ஷைத்தான் குறுக்கிட்டான். அவனை கல்லால் அடிக்கப்பட்டது அன்று. இன்று கல் எறிகிறீர்கள். ஷைத்தான் வந்து நின்று கொண்டிருக்கிறானா?

அன்று தவாபில் காஃபிர்கள் பார்க்க வேண்டுமென்றே அண்ணலார் ரமல் செய்தார்கள். இன்று எந்த காஃபிர்கள் மக்காவில் இருந்து கொண்டு பார்க்கிறார்கள். ஆனால் ரமல் செய்கிறரீர்கள்தானே!

அவ்வாறே பெருமானாரின் பெயர்கேட்டு கட்டை விரலில் முத்தமிடுவதும் அதனை கண்களில் ஒற்றிக் கொள்வதும் நபிமார்களின் பல செயல்கள் அவர்கள் அன்ற செய்த காரணம் இன்று இல்லாவிட்டாலும் அவர்கள் செய்த செயல் எனும் பரக்கத்தின் அடிப்படையில் நமக்கும் அச்செயல் பரகத்தாக, முஸ்தஹப்பாக, சுன்னத்தாக அமைகிறது.

அத்தோடு ஹதீதில் பெருவிரலை முத்தமிடுவது என்றுதான் உள்ளது. ஆகவேஅதற்கு காரணத்தைத் தேட வேண்டியது அவசியமில்லை. எனினும் அதுபற்றிய ஆய்வும், அதிலுள்ள நுட்பமும் தேடப்படுவது மேற்கொண்டு அவ்விஷயம் உறுதிப்படவும், மனம் குழப்பமின்றி ஏற்றுக் கொள்ளவும், அதன் நுட்பங்களை அறிவு தேடுவதாலுமாகும்.

தப்சீர் காஜின், ரூஹுல் பயான் போன்றவற்றில் வருகிறது... பதத் லஹுமா ஸவ்ஆதுஹுமா என்ற வசன விளக்கத்தில் அதாவது அக்கனியைப் புசித்தால் நபி ஆதம், ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம் ஆகியோரின் அவுரத் வெளிப்பட்டது என்பதற்கு... அவ்விருவரின் ஆடை சுவர்க்கத்தில் மெல்லிய நகமாக இருந்தது. பின் அது நீக்கப்பட்டபோது ஞாபகர்த்தமாக கை கால்களில் உடல் நுனியில் கொஞ்சம் மிச்சம் வைக்கப்பட்டது என்று வருகிறது.

ஆக நகம் சுவனத்து ஆடையாகும். அதில் யாரால் - யாரைக் கொண்டு சுவனபதியோ அந்த மாபெரும் அருளாகிய அண்ணலார் அஹ்மத் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் திருப்பெயர்கேட்டு முத்தமிடுவதை எவ்வகையிலும் குறைகாண முடியாது.

சுவனக்கல் என்பதால்தானே ஹஜ்ருல் அஸ்வதை முத்தமிடப்படுகிறது. சுவனப் பொருட்கள் முத்தமிடப்படுவது சுன்னத்தான செயல்தானே!

அல்லாஹு ரப்புல் ஆலமீன் சத்தியத்தை, பெருமானார் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் மகத்துவத்தை அறிந்து, புரிந்து, உணர்ந்து, இதயத்தில் நிரப்பி அன்னாரின் அருட்பெரும் ஷஃபாஅத்திற்கு தகுதிபெற்று அண்ணலாரோடு அச்சுவனபதி புகவும், அண்ணலாரின் அடிமையாய் வாழவும் அருள்பாலிப்பானாக! ஆமீன்.

*முற்றும்.*

www.sufimanzil.org